# காயத்ரீஜபம்/ ஹோமம்

அனைத்து விதமான மந்திரங்களையும், குருவின் மூலம் உபதேசம் செய்து கொண்டு, ஜபம் மற்றும் ஹோமம் செய்வதின் மூலம் முழுமையாள பலனை அடையலாம்.

இவ்வாறு மந்திரங்களைத் தன்னால் ஜபம் மற்றும் ஹோமம் செய்ய இயலாதவர்கள், தனக்காக மற்றவர்களை விட்டு செய்யச் சொல்லி, அதன் பலனை நாம் அடையலாம்.

ஆகவேதான், நாம் செய்யும் பலவிதமான ஜப, ஹோமங்களில், நாம் ஸங்கல்பம் மட்டும் செய்து கொண்டு, மந்திரம் தெரிந்த புரோஹிதர் மூலம், நமக்காக அவரை ஜப, ஹோமங்கள் செய்யச் சொல்கிறோம். இவ்வாறு நமக்காக புரோஹிதர் மந்திர ஜபம், ஹோமம் செய்யும்போது, அதன் பலன் புரோஹிதருக்கு கிடைப்பதில்லை. மாறாக, தக்ஷிணை கொடுப்பவரான, கர்த்தாவுக்கே முழுப்பலன் கிடைக்கும். இது, காயத்ரீ ஜபம் மற்றும் காயத்ரி  ஹோமம் தவிர மற்ற அனைத்து விதமான மந்திர்ங்களுக்கும் பொருந்தும்.

**"ந காயத்ர்யா: பருரா மந்தர:"** என்பதாக, மந்திரங்களுக்குள் காயத்ரீ மந்திரத்தைக் காட்டிலும் உயர்வான மந்திரம் இல்லை. எனவே, ஒருவர் காயத்ரீ மந்திரத்தை, தனக்காக மட்டுமே ஜபம், ஹோமம் செய்யலாம். மற்றவர்களுக்காக, காயத்ரீயை ஜபமோ அல்லது ஹோமமோ செய்வது இல்லை.

காயத்ரீ மந்திரத்தை குறிபிட்ட எண்ணிக்கையில், ஜபம் மற்றும் ஹோமம் செய்ய வேண்டும்.

ஹோமம் செய்ய வேண்டும் என்று நினைப்பவர்கள், தாமே அக்னியின் முன்பாக அமர்ந்து கொன்டு, ஹோமம் செய்ய வேண்டும்.

## ஜபம்/ஹோமம் செய்யும்போது கடைபிடிக்க வேண்டிய் விதிகள்:-

1) இங்கு சொல்லப்படும் விதிகள் எல்லா ஜபங்களுக்கும் பொருந்தும். காயத்ரீ ஜபம் செய்யாமல், வேறு எந்த ஜபமும் செய்ய ஆரம்பிக்கக்கூடாது.
2) காயத்ரீ ஜபம் செய்யும் போது கிழக்கு முகமாக உட்கார்ந்து கொள்ள வேண்டும்.
3) தலையை துணியால் முடிக்கொண்டு ஜபம்/ஹோமம் செய்யக்கூடாது.
4) இரு கைகளையும் துணியால் மூடிக்கொண்டு ஜபம் செய்ய வேண்டும்.
5) ஈரத்துணியை உடுத்திக் கொண்டு ஜபம்/ஹோமம் செய்யக்கூடாது.
6) நிமிர்ந்து உட்கார்ந்துக்கொண்டு காயத்ரீ ஜபம் செய்ய வேண்டும்..
7) பிளாஸ்டிக் ஆஸனத்தின் மீது அமர்ந்து கொண்டு ஜபம்/ஹோமம் செய்யக்கூடாது.
8) ஆணியில்லாத மரப்பலகை, தர்பாஸனம் சிறந்தது.

9) கையில் யஜ்ஞோபவீதத்தைப் பிடித்துக் கொண்டு ஜபம்/ஹோமம் செய்யக்கூடாது.
10) ஸந்தியாவந்தனத்தின்போது, காயத்ரீ ஜபம் செய்யும் பொழுது, காலையிலும், மத்யானத்திலும் கிழக்கு முகமாக நின்று கொண்டும், ஸாயாங்காலத்தில் மேற்கு முகமாக உட்கார்ந்து கொண்டும் செய்ய வேண்டும்.
11) நடந்து செல்லும் போதும், வாகனங்களில் பிரயாணம் செய்யும் போதும், எந்த ஒரு தெய்வத்தின் காயத்ரீ மந்திரத்தையும் ஜபம் செய்யக்கூடாது.
12) காயத்ரீ மந்திரத்தை ஆடியோ கேசட் மூலம் கேட்பதோ அல்லது ராகமாக பாடுவதோ கூடாது.
13) பிறர் காதில் விழும்படி ஜபம் செய்வது அதமம்.
14) குரல் வெளியே கேட்காதபடி உதடு மட்டும் அசையும்படி ஜபம் செய்வது மத்திமம்.
15) மனதுக்குள் ஜபம் செய்வது உத்தமம்.
16) திறந்த வெளியில் காயத்ரீ ஜபம்/ஹோமம் செய்யக்கூடாது.
17) ஜபம் செய்து முடித்த பிறகு, ஜபம் செய்த இடத்தில் சிறிது ஜலம் தெளித்து, அந்த ஜலத்தை விரலால் ஒற்றி எடுத்துக் கொண்டு தன் நெற்றியில் இட்டுக் கொள்ள வேண்டும்.
18) ஜபம் முடியும் வரை எந்த காரணம் கொண்டும் யாருடனும் பேசக்கூடாது.
19) ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் உட்கார்ந்து கொண்டு ஜபம் செய்யும் போது, ஒருவர் பக்கத்தில் ஒருவர் உட்கார்ந்து கொள்ள வேண்டும். ஒருவர் பின்னால் ஒருவர் உட்காரக்கூடாது.
20) எத்தனை தடவை காயத்ரீ ஹோமம் செய்ய உத்தேசிக்கிறமோ, அதற்கு பத்து மடங்கு ஜபம் செய்திருக்க வேண்டும்.

## காயத்ரீ ஜபம் மற்றும் ஹோம பலன்கள்:-

1) தினமும் ஆயிரம் முறை ஜபம் செய்தால் தீர்க்காயுள் கிட்டும்.
2) தாமரை மலர்களால் ஹோமம் செய்தால் மோக்ஷம் கிட்டும்.
3) நூறு முறை ஜலத்தால் ஜபம் செய்து, அந்த ஜலத்தை உட்கொண்டால் பேய், பிசாசு அகலும்.
4) அத்தி ஸமித்தால் ஹோமம் செய்தால் பைத்தியம் தெளியும்.
5) தயிர் அல்லது பாலால் 25 லட்சம் முறை ஹோமம் செய்தால், உடலில் காயத்ரீ சித்தி உண்டாகும்.
6) பாயஸத்தால் தினமும் நூறு முறை ஹோமம் செய்தால் நல்ல புத்திரன் பிறப்பான்.
7) 1008 முறை காட்டு நொச்சியால் ஹோமம் செய்தால், இடி, பூகம்பம் தோன்றாது.
8) தினமும் சங்கு புஷ்பத்தால் ஹோமம் செய்தால் குஷ்ட நோய் அகலும்.
9) நாயுருவி, அரச சமித்தால் ஹோமம் செய்தால், அபஸ்மாரம் போகும்.
10) பொரியால் ஹோமம் செய்தால் நல்ல வரன் கிடைக்கும்.

## மேலும் சில விஷயங்கள்:

1) மூன்று தலைமுறையாக காயத்ரீயை விட்டவன் பிராம்மணனாக மாட்டான்.
2) மூன்று தலைமுறையாக யக்ஞம் இல்லாவிட்டால் அவன் துர்ப்ராம்ணன்; கெட்டுப்போன பிராமணன்.
3) கெட்டாலும், “பிராமணன்” என்ற பெயராவது இருக்கிறது. மறுபடியும் பிராம்ணன் ஆவதற்கு பிராயச்சித்தம் உள்ளது.
4) ஆனால், காயத்ரீயை மூன்று தலைமுறையாக விட்டுவிட்டால், பிராமணத்துவம் அடியோடு போய்விடும். அவன் மறுபடியும் பிராம்ணனாகமாட்டான்; அவன் பிரம்மபந்து தான்; அதாவது பிராமணனர்களை உறவுக்காரர்காளாகக் கொண்டவன். அதிர்ஷ்டவசமாக இன்னும் மூன்று தலைமுறை ஆகவில்லை. ஆகையால், இந்த நெருப்புபொறியை ஊதிப் பெரிதாக்கிக் கொள்ள வேண்டும்.
5) ஆகையால், ஞாயிற்றுக் கிழமையாவது ஆயிரம் காயத்ரீ ஜபம் பண்ண வேண்டும்.
6) கால நியமம், விரத நியமம், ஆஹார நியமம் முதலியவைகளை அனுஷ்டிப்பது பிரம்மசரியம். அத்யயானத்தில்,ஸ்வர லோபம், வர்ண லோபம் முதலான உச்சாரணத் தப்புகள் ஏற்படக்கூடும். இதற்குப் பிராயச்சித்தமாக ஆவணியாவிட்டத்தன்று எள்ளு மாத்திரம் சாப்பிட்டு அன்று முழுவதும் உபவாசம் இருந்து, மறுநாள் 1008 பலாச ஸமித்து அல்லது அஸ்வத்த ஸமித்தால் அதுவும் இல்லாவிடில், கடைசிப் பட்ச்சமாக தர்ப்பையினாலாவது ஹோமம் பண்ண வேண்டும்.

## ஸஹஸ்ர மற்றும் பாப நிவர்த்தி காயத்ரீ ஜபம்.

**ஆசமனம்:**- அச்சுதாய நம: அநந்த்தாய நம: கோவிந்தாய நம: கேசவ, நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணோ, மதுஸுதன, த்ரிவிக்ரம, வாமன, ஶ்ரீதர, ஹ்ருஷிகேச, பத்மநாபா, தாமோதரா.

**கணபதி தியானம்:**- சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவரணம் சதுர்புஜம் ப்ரஸந்நவதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப ஸாந்தயே.

**ப்ராணாயாமம்:**- ஒம் பூ:, ஒம் புவ:, ஒகும் ஸுவ:, ஒம் மஹ:, ஒம் ஜந:, ஒம் தப:, ஓகும் சத்யம், ஒம் தத்ஸ விதுர்வரேண்யம்| பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோந: ப்ர்சோதயாத் ஓமாபோ ஜ்யோதீரஸ: அம்ருதம் ப்ரமஹ பூர்வஸ்ஸுவரோம்,

**பாப நிவர்த்திக்கு காயத்ரீ ஸங்கல்பம்:**- மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஶ்ரீபரேமேஸ்வர ப்ரீத்ய்ர்த்தம் ஶுபே ஶொபனே முஷீர்த்தே ஆத்யப்ரஹ்மண: த்வீதீயபரார்த்தே ஶ்வேத வராஹ கல்பே வைவஸ்வத மந்வந்தரே அஷ்டாவிம்ஶதி தமே கலியுகே ப்ரதமேபாதே ஜம்பூத்வீபே பாரத வர்ஷே பரதகண்டே மேரோ தக்ஷிணே பார்ஶ்வே ஶாக்ப்தே அஸ்மின் வர்த்தமானே வ்யவாஹாரிகே ப்ராபவாதீதாம் ஷஷ்ட்யா:

ஸம்வத்ஸராணாம் மத்யே ..................... நாம ஸமவத்ஸரே, ....................................... அயனே ..............ருதௌ ............. மாஸே .........பக்ஷே ஶபதிதௌ .................. வாஸரயக்தாயாம் .........................நக்ஷ்த்ரயுக்தாயாம் ஶபநக்ஷ்த்ர ஶபகரண ஏவங்குண விஶேஷண விஶிஷ்டாயாம் அஸ்யாம் ஶபதிதௌ மம ஜனமாப்யாஸாத் ஜன்மப்ரப்ருதி ஏநத க்ஷணப்ர்யந்தம் மனோ வாக் காயயாதி சர்வங்கானி விரசித பாபானாம் நிவ்ருத்யர்த்தம் ஆத்மஶுத்தி ஸித்தியர்த்தம் ஸ்ரீ சந்த்யா காயத்ரீ சாவீத்ரீ ஸரஸ்வதி ப்ரேரணயா லோக க்ஷேமம் அவாப்யர்த்தம் ஸ்ரீ மஹா திரிபுர ஸுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீஸ்வர ஸ்வரூபஸ்ய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீர்வரஸ்ய ஸ்ரீ சந்தரசேகரேந்தர ஸரஸ்வதி ஸ்ரீ மஹாஸ்வாமீ ஸம்ய்மீந்தா குருவர்யஸ்ய ப்ரேரணாய ஸ்ரீ தையல்நாயகி அம்பிகா ஸமேத ஸ்ரீ வைத்தியநாத ஸ்வாமி சன்னிதௌ ( **அல்லது அவரவர் குலதெய்வத்தின் பெயரையோ அல்லது அருகில் உள்ள தெய்வத்தின் பெயரையோ சொல்லிக் கொள்ளவும்)**

**பாபநிவர்த்திக்கு:-** ஜன்மாப்யாஸாத் ஜன்மப்ரப்ருதி ஸமஸ்த பாப க்ஷயார்த்தம் தஷஸஹஸ்ர ஸங்கயாக காயத்ரீ ஜபம் கரீஷ்யாம:

**ஸஹஸ்ர காயத்ரிக்கு:-** அஷ்டோத்தர ஸஹஸ்ர ஸங்க்யாய காயத்ரீ மஹா மந்தர ஜபம் கரீஷ்யே.

**ப்ரணவ ஜபம்:-**
ப்ரணவஸ்ய ரீஷிர் ப்ரஹ்மா ----- தேவீகாயத்ரீச் சந்த: --- பரமார்த்த தேவதா.

பூராதி ஸ்ப்த வ்யாஹ்ருதீனாம் அத்ரீ ப்ருகு குத்ஸ வஸிஷ்ட கௌதம காஸ்யப ஆங்கிரஸ ருஷய -------- காயத்ரீ உஷ்ணிக் அனுஷ்டுப் ப்ருஹதீ பங்கதி த்ருஷ்டுப் ஜகத்யாஸ் சந்தாகும்ஸீ ---- அக்னி வாயு அர்க்க வாகீஸ வருண இந்தர விஸ்வவே தேவா தேவதா.

ஸாவித்ரியா ருஷி: விஸ்வாமித்ர ---- தேவீகாயத்ரீ சந்த: ----- ஸவிதா தேவத.

காயத்ரீ சிரஸோ ப்ரம்ஹாருஷி: --- அநுஷ்டுப் சந்த: ---- பரமாத்மா தேவதா:

**ப்ராணாயாமம்:- (10 தடவை செய்ய வேண்டும்)** ஒம் பூ:, ஒம் புவ:, ஒகும் ஸுவ:, ஒம் மஹ:, ஒம் ஜந:, ஒம் தப:, ஓகும் சத்யம், ஒம் தத்ஸ விதுர்வரேண்யம்| பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோந: ப்ர்சோதயாத் ஓமாபோ ஜ்யோதீரஸ: அம்ருதம் ப்ரமஹ பூர்வஸ்ஸுவரோம்,

**காயத்ரீ ஆவாஹனம்:-** ஆயாத்வித்யனுவாகஸ்ய வாமதேவ ருஷி: --அனுஷ்டுப் சந்த: ---- காயத்ரீ தேவதா.

ஆயாது வரதா தேவீ அக்ஷரம் ப்ரஹ்ம ஸ்ம்மிதம்! காயத்ரீம் சந்தாஸாம் மாதேதம் ப்ரஹ்ம ஜுஷஸ்வ ந:!! ஓஹோஸி ஸஹோஸி பலமஸி ப்ராஜோஸி தேவானாம் தாம நாமஸி விஸ்வமஸி விஸ்வாயு: ஸர்வமஸி ஸர்வாயு: அபி பூரோம்

காயத்ரீம் ஆவாஹயாமி, ஸாவித்ரீம் ஆவாஹயாமி, ஸரஸ்வதீம் ஆவாஹயாமி.

**காயத்ரீ ந்யாஸ:** :- ஸாவித்ர்யா ருஷிர் விஸ்வாமித்ர:----- நிஸ்ருத் காயத்ரீச் சந்த: --- ஸவிதா தேவதா!

காயத்ரீ சிரஸோ ப்ரம்ஹா ருஷி:ப் ---- அநுஷ்டுப் சந்த: ---- பரமாத்மா தேவதா:

**காயத்ரீ தியானம்:-**
முக்தாவித்ரும ஹேமநீல தவளச்சாயைர் முகைஸ் த்ரீக்ஷணை:
யுகதாமிந்துகலா நிபந்தமகுடாம் தத்வாரத்தவர்ணாமிகாம்!
காயத்ரீம் வரதாபயாங்குச கசாச்சுப்ரம் கபாலம் குணம்
சங்கம் சக்ரமதாரவிந்தயுகளம் ஹஸ்தைர்வவஹந்தீம்பஜே !!
அக்ஷஸ்ரக் குண்டிகா ஹஸ்தாம் சுத்தஸ்படிக நிர்மலாம்!
ஸர்வ வித்யாமயீம் வந்தே கயத்ரீம் வேத மாதரம்!!
யோ தேவஸ்ஸவிதாஸ்மாகம் தியோ தர்மாதிகோசரா!
ப்ரேரயேத் தஸ்ய யத் பர்க்க: தத்வரேண்ய முபாஸ்மஹே!!

**பாப நிவர்த்திக்கு காயத்ரீ ஜபம்:-** (தினம் 1000 முறை, 10 நாட்களுக்கு தொடர்ந்து செய்ய வேண்டும்)

**ஸஹஸ்ர காயத்ரி முடிந்த பொழுது 1008 தடவை.**

**காயத்ரீ மந்தரம்:-**ஓம் பூர்புவஸ்ஸுவ:! ஓம் தத்ஸவிதுர்வரேண்யம்! பர்கோ தேவஸ்ய தீமஹி! தியோ யோ ந: ப்ரசோதயத்!!

**ப்ராணாயாமம்:-** ஓம் பூ:, ஓம் புவ:, ஒகும் ஸுவ:, ஓம் மஹ:, ஓம் ஜந:, ஓம் தப:, ஓகும் சத்யம், ஓம் தத்ஸ விதுர்வரேண்யம்| பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோந: ப்ர்சோதயாத் ஓமாபோ ஜ்யோதீரஸ: அம்ருதம் ப்ரமஹ பூர்வஸ்ஸுவரோம்,

**காயத்ரீ உபஸ்தானம்:-** உத்தமே சிகரேதேவீ பூம்யாம் பர்வதமூர்த்தனி! ப்ராஹ்மணேப்யோ ஹ்யனுஜ்ஞானம் கச்ச தேவி யதா ஸுகம்!!.

மந்தரஹீனம் க்ரயாஹீனம் பக்திஹீனம் ஹீதாஸ!| யத்து தந்து மயாதேவ ஸ்ரீபரிபூர்ணம் ததஸ்துதே!! ப்ராயஸ்சித்தாநி அசேஷாணி தப: கர்ம ஆத்மகாநிவை யாநிதேஷாம் அசேஷாணாம் க்ருஷ்ண அநுஸ்மரணம் பரம்!! ஸ்ரீ க்ருஷ்ணாய நம:! ஸ்ரீ க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண.

**அபிவந்தனம்:-** அபிவாதயே ...................................................................: அஹம் அஸ்மிமோ.

**ஆசமனம்:-** அச்சுதாய நம: அநந்த்தாய நம: கோவிந்தாய நம: கேசவ, நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணோ, மதுஸுதன, த்ரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ஹ்ருஷிகேச, பத்மநாபா, தாமோதரா.